# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 | யாழ்ப்பாணம். | தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு: க. சி. குலரத்தினம் ★ ஆடி 1978 ★ இதழ் - 31





## விழா நாயகம் அவர்கள்

இலக்கிய கலாநிதி பண்டிதமணி அவர்கள் தூய வாழ்வில் விழாக்களுக்குக் குறைவே இல்லை. அவர் தம் இளமைக் காலந்தொடக்கம் எண்பதாண்டுப் பராயத்தவராய் இன்றிருக்கும் முதுமைக் காலம் வரை அவருக்கு மாணவர்கள், அபிமானிகள், நண்பர்கள் எத்தனையோவிழாக்கள் எடுத்தார்கள். கொழும்பு,கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய முப்பெரும் தலைநகரங்கள் முன் எப்போதாயினும் கண்டுவக்காவகையில் பெருவிழாக்கள் நடைபெற்றன.

இலக்கிய வழி, கம்பராமாயணக் காட்சிகள், பாரத நவமணிகள், சமயக் கட்டுரை, கந்தபுராண போதனை, கந்தபுராண கலாசாரம், சைவ நற்சிந்தனை, தட்சகாண்டவுரை முதலிய படைப்புக்கள் வெளிவந்தபோது அவர்தம் அன்பர்கள், அபிமானிகள், மாணவர்கள் அவரைச் சும்மா விடவில்லை. இலங்கையில் பண்டிதமணியவர்களைப் பின்தொடரும் மாணவ கூட்டம்போல் வேறெங்கும் காணவியலாத பெருமை அவருக்குரியது. கனிவோடும் கருணையோடும் கண்டனத்தோடும் அவர் பேசுபவை யாவும் அவர்தம் மாணவர்களுக்குத் தெவிட்டாத விருந்து இலக்கிய விருந்து - ஞான விருந்து.

*முன்னர் பல முறை நடைபெற்ற விழாக்கள் போதா வென்று கருதிய நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரின்*

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



வெங்காயப் பயிரை அழிக்கும் பூச்சி புழுக்களை அறவே நீக்குவதற்கு வெளிநாட்டு நிபுணரான இவர் சில வழிகளைத் தொழிலதிபர் கனகராசா அவர்களுடன் கலந்துரையாடுகிறார். பொதுநலவாய நாடுகளின் பணிப்பாளரான கலாநிதி பிரெட் சைமன்ஸ் தற்போது பங்களூரில் கடமையாற்றுகிறார்.

**பக்தி உள்ளவன் கடவுளுக்கு அருகில் இருக்கிறான்**

உ
சிவமயம்

# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

திருச்சாய்க்காடு — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

இந்திரன் பிரம னங்கி யெண்வகை வசுக்க ளோடு
மந்திர மறைய தோதி வானவர் வணங்கி வாழ்த்தத்
தந்திர மறியாத் தக்கன் வேள்வியை தகர்த்த ஞான்று
சந்திரற் கருள்செய் தாருஞ் சாய்க்காடு மேவி ஞரே.

இந்திரனும் பிரமதேவனும் அக்கினிதேவனும் அவர்களோடு அநலன், அநிலன், ஆபன், சோமன், தரன், துருவன், பிரத்தியூடன், பிரவாசன் முதலான அட்டவசுக்களும் மற்றத்தேவர்கள் யாவரும் மந்திரங்களையுடைய மறைகளையோதி வணங்கி வாழ்த்தப்பெறுபவராகிய இறைவன், அன்று செயற்பாலதும் செய்வகையும் அறியாது தக்கன் செய்த யாகத்தைத் தகர்த்தபோது, சந்திரனுக்குத் திருவருள் புரிந்தார். அவர் திருச்சாய்க்காடு என்னுந் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ளார்.

பக்தியின் முக்கியபயன் ஆண்டவனைக் காண்பதும், கண்டு ஆனந்தமடைவதுமாகும்.




## மன்னரைச் சேர்ந்தொழுகல்

அமைச்சர்கள் அரசைச் சேர்ந்து ஒழுகும்முறைமை

அகலாது அணுகாது தீய்க்காய்வார் போல்க
இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

அரசரை (அரசினை) சேர்ந்தொழுகுவோர் வெப்பத்தால் குளிர்நீக்கிக் கொள்பவர் போல, மிகவும் விலகிப் போதலும் மிகவும் நெருங்குதலும் இல்லாமல் நடக்க வேண்டும்.

### Behaviour Towards Kings (State)

They who serve a sovereign (state) is flighty should be like them that warm themselves at a fire standing neither too far nor too near.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## விழா நாயகம்....

மைந்தர் நடராசன் அவர்கள் ''ஒரு விழாவன் றேராயிரம் ஆயிரப் பெருவிழாவெடுத்துப் பிள்ளையைப் போற்றுமின்! பத்தரை மாற்றுத் தங்கக் கால் நாட்டி முத்துப் பந்தர் முறை முறை அமைத்தா றாயிரம் யானையும், அரசரும், அறிஞரும் ஆயிரமாயிரம் அன்பருந் தொண்டரும் செஞ்சொற் கவிஞரும் திருவுடைச் செல்வரும் எஞ்சலில் அவன் புகழ் இசைத்துப் பாடியும் பொன்னெளிர் முத்து வெண் குடை நிழலில் பூமழை பொழிய வீதிவலங் கொண்டு பொற்றவி சிருத்திப் போற்றலும் போற்றுமின்!''

இற்றைக்கு இருபதாண்டுகளுக்குமுன் நடராசன் அவர்கள் மங்கல மணிவிழா வாழ்த்தும் பரவலும் பாடிய வகையில் இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகம் பண்டிதமணி அவர்களுக்கு 25-6-78 ஞாயிற்றுக்கிழமை விழாவெடுத்தது. வளாகத்தலைவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களும் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மாணவச்செல்வங்கள், பண்டிதமணி அவர்களின் பழைய மாணவர்கள் சார்பில் ஆசிரியர் பஞ்சாட்சரம் அவர்கள் எடுத்த பெருமுயற்சியால் யாழ் வளாகம் முன் எப்போதாயினும் கண்டறியாவகையில் பெரு விழாவெடுத்தது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தார் கொழும்பில் வழங்கிய இலக்கிய கலாநிதிப்பட்டம் பண்டிதமணி அவர்கள்மீது ஒட்டிக்கொண்டது. முன்னர் இரசிகமணி, ஆசிரியமணி, சித்தாந்தசாகரம் போன்ற எத்தனையோ பட்டங்கள் அவர் மீது ஒட்டப்பட்டபோதும் அவர் அவற்றை உணரவில்லை.

பட்டமளிப்பு விழாவில் அவர் சமுகமளிக்காத நிலையில் அவரை அறிமுகப்படுத்திப் பேசிய பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள், பண்டிமணியின் பெருமையைத் தம்பீடுநடையில் மொழிந்துள்ளார்.

''தமிழ்க்கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டதே அவருடைய வாழ்வாக அமைந்தது. தம்முடைய கருத்துக்களைப் பரப்பும் நோக்கமாக அவர் பிரமச்சாரியாகவே இருந்து தமிழ் ஆய்வு செய்வதிலும், மாணவர்க்கும் ஆசிரிய மாணவர்க்கும் கற்பிப்பதிலும் தம் பெரும்பாலான காலத்தைக் கழித்தார். சைவம், இந்துதர்மம், பண்டைத் தமிழிலக்கியம் ஆகியன பற்றி நூற்றுக்கணக்கான கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். ...இன்று இலங்கையிலே எம்முடன் வாழும் அறிஞர்களுள் சைவசித்தாந்தக் கருத்துக்களை விரித்துரைப்பதிலே தலைசிறந்த வல்லுநராக இவருள்ளார். இத்துறை சேர்ந்த பல உரைகளும் கட்டுரைகளும் இன்றும் வெளியிடப்படாமலுள்ளன.


சிறந்த எழுத்தாளராகவும், ஊக்கமுள்ள ஆசிரியராகவும், பேச்சாளராகவும், இலக்கிய விமரிசகராகவும், கவிஞராகவும், உரையாசிரியராகவும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை இலங்கையிலும் பிறநாடுகளிலும் புகழ்பெற்றார்.

இந்த நாட்டிலே தமிழர் சமயத்தினையும் பண்பாட்டினையும் பாதுகாக்க அரும்பாடுபட்ட ஆறுமுகநாவலர் தமக்கென ஒரு மரபினையும், அம்மரபினைப் பேணும் நல்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

★ சீலம் நிறைந்த வாழ்வே உண்மையான வாழ்வு ★

# சிவலிங்கம்



சிவப்பரம்பொருள் ஒன்றாய், வேறாய், உடனாய் எங்கும் உள்ளது. அஃது எங்கும் எல்லாமாய் உள்ளது. ஆதலால் சிவமயம் என்கிறோம். சிவப்பரம் பொருள் அருவமாயுள்ளது. அதற்கு இயல்பாயுள்ள பெருங் கருணைக்குணம் சக்தி. அது கருணை காரணமாக உயிர்களை ஆட்கொண்டருளுவதற்குத் திருவுருவங்களை எடுக்கின்றது.

அருவமாயுள்ள இறைவன் உருவமாய திருமேனிகளை எடுப்பதற்கு மூலாதாரமாயுள்ளது அருவுருவம். அஃது அருவமும் உருவமும் அல்லாத ஒருருவம். அது சிவலிங்கம். முதலில் உண்டாகிய சோதி ரூபம் ஆதி மூர்த்தம், மூல மூர்த்தம்.

சிவலிங்கம் மூல மூர்த்தமெனவே அது திருக்கோயிலின் ஆதி மூலத்தில், மூல ஸ்தானத்தில், கருப்பக் கிருகத்தில் எழுந்தருளியுள்ளது. திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஏனைய மூர்த்தங்கள், திருமேனிகள் யாவும் இந்தச் சிவலிங்கத்தில் அடங்கும். அவை பரிவார மூர்த்தங்களாயும், எழுந்தருள் மூர்த்தங்களாயும் அமையும். சிவலிங்கம் அசையா மூர்த்தம் - சிலா வடிவம். அது பீடத்தோடு கூடிய யந்திரத் தகட்டின் மேல் எழுந்தருளப்பெற்று மருந்து சாத்தப் பெற்றுச் சலனமின்றி இருப்பது.

## சிவலிங்கம் கல்லால் அமைவது

உலகில் எல்லாவற்றிலும் மேலான பரம்பொருளை எங்கும் நீக்கமற நிறைந்திருந்து உலகெலாம் உணர்ந்தோதற்கரியதாயுள்ள பெரும்பரனைக் குறிக்கும் சிவலிங்கத்தைக் கல்லாற் செய்வதற்குக் காரணமுண்டு. கல் முதலிற் தோன்றியது. கல்தோன்றி மண்தோன்றாக் காலம் என்பது இலக்கியம். கல் மற்றைய பூதங்களாய நீர், தீ, காற்று, ஆகாயம் போலன்றி எல்லாவற்றையும் தன்பால் அடக்கி வெளிவிடுந்தன்மையுள்ளது. அசைவற்றது, மாறாதது, அழியாதது. பாரிடை ஐந்தாய்ப் பரந்த இறைவனைப் போலப் பஞ்ச பூதகுண மகிமைகள் படியப்பெற்றது.

## சூக்குமலிங்கம்

ஆலயந்தானும் அரனெனத் தொழுமே என்றும், திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே நினைந்தவர்க்குச் சிவனுறைவானுங்கே என்றும் சித்தாந்த சாத்திரங்கள் தெளிவாக உரைக்கின்றன. சிவமயமான திருக்கோயிலிலே கோபுரம் என்னும் தூபி தூலலிங்கம் எனப்படும். கொடிமரத்தடியிலுள்ள பலிபீடம் பத்திர லிங்கம் எனப்படும். பூசைபுரியும் ஆதிசைவ அந்தணப் பெரியார் ஆன்மலிங்கம். எல்லாவற்றையும் கடந்து தூய்மைக்குள் தூய்மையான மூலத்தானத்தே எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்கம் எனப்படும். சிவனைக் குறிக்கும் அடையாளமாகலின் அது சிவலிங்கம் எனப்படுகிறது. சூக்குமலிங்கமே அதி விசேடமுடைய லிங்கமாகும். ''தூலலிங்கமாந் தூபி, சூக்கும லிங்கமாம் உள்ளி லிங்கம், மேலும்பலி பத்திரம்'' என்பது சைவசமய நெறி.

— தொடரும்

# ஆடி மாதம்

பூராடத்துக்கு ஆஷாடம் என்றும் பெயர். ஆஷாடம் என்பது உத்தராடத்துக்கும் பொதுவாயினும் அது பூராடத்துக்கே சிறப்பான பெயராகும். பூராடம் என்பது பூர்வ ஆஷாடம் என்பதன் திரிபு. உத்தராடம் என்பது உத்தர ஆஷாடம் என்பதன் திரிபு.


ஆஷாடத்தில் பூரணை வருவதால் அம்மாதம் ஆடி எனப் பெயர்பெற்றது. ஆடி என்பது ஆஷாடத்தின் திரிபு. ஆடியில் சகிக்கமுடியாத முதுவேனில் நிகழ்வதால் ஆடிக்குச் சுசி என்றும் பெயர்.

பூராடமும் உத்தராடமும் குளம்புபோல அமைந்துள்ளன. அவற்றை உடைகுளம், முற்குளம், கடைக்குளம் எனக் கூறுவர்.

# ஆடி அமாவாசை

சைவசமயத்தவர் கடலாடிப் பிதிரர் கடன்செய்யும் நாள்களுள் ஆடி அமாவாசை மிகவுஞ் சிறந்தது, புனிதமானது. சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேரில் வரும்போது அமாவாசை உண்டாகிறது. அமா என்பது ஒரிடத்தில் குவிந்துள்ளது எனப் பொருள் தருவதாகும். சூரியனும், சந்திரனும் ஓரிடத்தில் குவிதல் கூடுதல் ஒரு சிறப்பினைத்தருவதாகும். ஆண்மை, ஆற்றல், தீரம், தியாகம் என்பன சூரியனிடத்துள்ள நல்லியல்புகள். அதுபோலவே மகிழ்ச்சி, உற்சாகம், தெளிவு, அறிவு, சாந்தம் முதலியன சந்திரனின் இயல்புகள். இங்ஙனமாய இரு தொகுதிகளும் ஒருங்கே அமைதல் புனிதமாகும். இந்தவேளை பிதிர்க்காரியஞ் செய்வதற்கு மிகவும் நல்லது. பிதிர்க்காரியத்தில் ஆண்டு தோறும் செய்வது சிராத்தம் என்னும் திவசமாகும். பிதிரர் உலகம் தென்னுலகமாதலாலும், சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் காலம் ஆடி மாதமாதலாலும் ஆடிஅமாவாசைக்குத் தனிப் பெருமையும் புனிதமும் உண்டு. அமாவாசை பூரணை நாள்களில் கடலாடுதல் பொதுவாக நல்லது. கடலாடலால் அழுக்குகள் நீங்குவதோடு மனமாசுகளையும் நீக்கலாம். மனமாசுகளை நீக்குவதற்கே தர்ப்பணம் முதலிய கிரியைகள் செய்கிறார்கள். ★

# இசைமாரி



வடக்கிலிருந்து வந்த இரு மேகங்கள் ஏழிசை மாரி பொழிந்து யாழ்ப்பாணத்தாரை இசை வெள்ளத்தில் நனையவைத்தன. முதலில் பேராசிரியர் மதுரை சோமு அவர்களும், பின்னர் சீகாழி கோவிந்தராசன் அவர்களும் புன்னாலைக்கட்டுவனில் அடைமழை பெய்தாற்போலக் கானமழை பொழிந்தார்கள்.

## சீகாழி — திருவாலவாய்

"சீகாழிப்பிள்ளை திருவாலவாய் மனைக்கு வருகைதந்து ஏழிசை பாடாமல் ஏகமாட்டார்" என்று சீகாழிக் கோவிந்தராசனை மில்க்வைற் தொழிலதிபரின் திருவாலவாய் மனையில் வரவேற்ற செய்தி ஆசிரியர் குறிப்பிட்டார். அன்று 23-6-78 வியாழக்கிழமை நண்பகல் திருவாலவாய் வள்ளுவ கோட்டத்தில் சீகாழிக் கோவிந்தராசன் அவர்கள் திருமுறைகள் ஓதினார். பன்னூற்றுக்கணக்காக அங்கே திரண்டிருந்த பாடசாலை மாணவர்கள் மகிழும்வண்ணம் பாரதியாரின் ஓடிவிளையாடு பாப்பா என்னும் பாடலைக் குழந்தையுள்ளத்தோடு மழலையாகப்பாடி எல்லோரையும் குதூகலிக்கச் செய்தார்.

கோவிந்தராசன் அவர்கள் மில்க்வைற் பணிமனையைப் பார்வையிட்டுத் தொழிலதிபரின் பன்முகமாயமைந்த சமூக சேவையை வியந்து பாராட்டி வாழ்த்தினார். ★

# ஐந்தெழுத்தும், ஐஞ்செயலும்

வேதங்கள், ஆகமங்கள், வேதாங்கங்கள், இதிகாசங்கள், புராணங்கள் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சித்தர் பாடல்கள், பண்டார சாத்திரங்கள், பிரபந்தங்கள் எனவுள்ள நூல்கள் யாவும் உயிர்களாகிய ஆன்மாக்கள் உயிர்களுக்கெல்லாம் இறைவனாகிய ஆன்ம நாயகனை அடையும் வழியைக் கூறுகின்றன.

முந்திய வேதங்கள் மூன்றிலும் நடுவிலுள்ள யசுர் வேதம் சிறப்புடையதென்பர். அதன் நடுவிலுள்ள காண்டம் முக்கியமானது. அதன் மத்திய பாகமாய நான்காவது பிரச்னம், ஸ்ரீருத்ரம் என்னும் சிறப்புப் பெற்றுள்ளது. அதனுள் நடுநாயகமாய் இருப்பது நம:சிவாய என்னும் ஸ்ரீபஞ்சாக்கர மகாவாக்கியமாகும். நமச்சிவாய வாழ்க என்னும் கருத்திலமைந்த, திருவைந்தெழுத்தின் நடுவிலமைந்த சிவ சீவரத்தினமாய் உள்ளது.

சிவசிவ என்பதன் பெருமையையும், வலிமையையும் பேற்றையும் எழுதிக்கொள்ள முடியாது, பேசிக்கொள்ள முடியாது. அதை ஆராதித்து அதனாலாம் பயனைக்கண்டு கொள்ளவேண்டியது சாதகர்களுடைய திறமையாகும். அதனை ஆராதிப்பதற்கு யோக்கியங்கள், தகுதிகள் இருத்தல் வேண்டும். அவை: விபூதி பூசிக்கொள்ளுதல், உருத்திராக்கம், அணிந்து கொள்ளுதல், திருவைந்தெழுத்தை உச்சரித்துக்கொள்ளுதல், வில்வத்தால் சிவபெருமானைப் பூசித்தல், என்றும் சிவனை நினைந்திருத்தல் என்னும் ஐந்து செயல்களுமாம் ஐந்தெழுத்தின் ஆற்றலைப் பெற வேண்டின் ஐந்து செயல்களையும் ஆராமையோடு செய்தாதல் வேண்டும். சிவ சிவ சிவ சிவ சிவ. ★

## வெளிநாட்டார் பார்வையில் மில்க்வைற் தொழிலகம்

22-2-69

வணக்கத்துக்குரிய சுவாமி திலக் மகராஜ் அவர்களும் நானும் மில்க்வைற் தொழிற்சாலையைப் பார்வையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம். தொழிலகத்தின் வேலை நிலைமை வெகு நன்றாக இருக்கிறது. இது நல்ல முகாமையில் நல்ல முறையில் நடைபெறுவதையிட்டுப் பெருமைப்பட்டு வாழ்த்துகிறோம்.

நித்திய சைதன்ய சுவாமிகள்
இந்தியா

* * *

23-2-70

My first visit to Milk White Soap and I have been very impressed with the kindness and friendship extended by you. Thank you very much. I look forward with pleasure to my second visit.

**Bush Brake Allen**
London E 8.

* * *

26-2-70.

This is my second visit. Thanks very much for your hospitality. The procedure of manufacturing soap - new methods of disintergrating colouring, Wrapping, packing etc.

**Maravella Coconut Producers**

அறியாமையை மறைப்பதால் அது அதிகரிக்கிறது. நேர்மையாய் உள்ளத்திலுள்ளதைக் கூறிவிட்டால், அவ்வறியாமை குறையுமென நம்புவதற்கு இடமிருக்கிறது.

11-6-1945. — மகாத்மா காந்தி

★ மனத்தை அடக்கினால் தியானம் இலகுவாகும் ★

இராதாகிருஷ்ணன் கண்ட

# இந்து தர்மம்

உலகம் உண்மை. ஆன்மா நுகர்வதன் அளவுக்குப் பொருளின் மதிப்பு உண்டாகிறது. மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். உலகம் உண்மையுடன் உறவு கொண்டுள்ளது. இந்தப் பிரபஞ்சம் இறைவனின் படைப்பு. இது ஆன்மாக்களின் நுகர்வுக்காக உருவாக்கப்பட்டது. இறைவனின் சக்தி உலகெங்கும் பாய்ந்துள்ளது. எங்கும் சிவமயம் என்பதே பேச்சு. இறைவன் உலகத்தைத் தாங்குகிறார். அவர் உலகில் பாதியாயும் பகுதியாயும் ஒன்றாயும் பலவாயும், வேறாயும் இருந்து விளையாடுகிறார். உலகை உண்டாக்குவதும், காப்பதும், அழிப்பதும் அவரின் தீராத விளையாட்டு. அதை விசாரிக்க நமக்கு அருகதையில்லை. பக்குவான்மாக்களுக்கு இந்தப் பரமரகசியம் விளங்கும். எமக்கு இந்த இரகசியங்களை ஏதோ ஒன்று மறைத்து நிற்கிறது. அது ஒருநாளில் எமக்கும் இந்த இரகசியத்தை விளங்கவைக்கும். திரைச்சீலை ஒதுக்கப்பட்டதும் தீபாராதனையை நாம் பார்க்கிறோம். வணங்குகிறோம். திரைச்சீலை தொங்கும்போது உள்ளே இறைவன் இல்லை என்று எந்த முட்டாளும் கூறுவதில்லை. ★

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | |
|---|---|
| சத்திநிபாதம் | — அருள் வீழ்ச்சி |
| சத்தியப்பிரமாணம் | — மெய்ம்மொழி |
| சத்தியம் | — உண்மை, மெய் |
| சத்திரம் | — சாவடி |
| சத்திரவைத்தியம் | — புண் மருத்துவம் |
| சத்து | — வலிவு, அறிவு, உண்மை |
| சத்திராதி | — பகைவன் |
| சத்துவகுணம் | — அமைதித்தன்மை |
| சநநம் | — பிறப்பு |
| சந்மபூமி | — பிறந்த இடம் |
| சநார்த்தனன் | — திருமால் |
| சந்ததம் | — எப்பொழுதும் |
| சந்ததி | — வழிவழி, பிள்ளை |
| சந்தம் | — செய்யுளோசை |
| சந்தர்ப்பம் | — சமயம், நேரம் |
| சந்தானம் | — வழிவழித் தொடர்பு |
| சந்தானாசிரியர் | — சித்தாந்த ஆசிரியர் |
| சந்தி | — மாலைப்பொழுது |

கடவுளை வழிபடுவதும் அதனால் அடையும் ஆனந்தமும், சாந்தியும் சிறந்த பொருள்களிற் சிறந்தவை.
— இராஜாஜி

முற்றொடர்:

# தொகை விளக்கம்

## மூன்று

121. உடற்பாவங்கள்
கொலை, களவு, காமம்

122. உடல்
தூலம், சூக்குமம், காரணம்

123. உண்மைப்பொருள்
பதி, பசு, பாசம்

124. உத்பாதங்கள்
திவ்வியம், அந்தரிட்சம், பார்த்திவம்

125. உத்திரத்திரயம்
உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி

126. உயர்திணை
மக்கள், தேவர், நரகர்

127. உயிரிடத்துப்பொருள்
ஞானம், இன்பம், துன்பம்

128. உயிர்த்தீ
உதரத்தீ, சினத்தீ, விந்துத்தீ

129. உவமையணி
பண்புவமை தொழிலுவமை, பயனுவமை



## *Divine Nectar*

*by*

## *Swami Sivananda*

1. Be alone for a few hours daily.
2. Give up greediness jealousy and hoarding.
3. Think twice before you speak.
4. Forgive and forget the harm done by others.
5. Be prepared to suffer any amount of pain.
6. Face obstacles cooly and boldly.
7. Admit your faults openly.
8. Be active and nimble always.
9. Control senses one by one.
10. Rest your mind in God and live in Truth.

ஒருசெடியின் வாசனைபோல், தேகத்தின் உயிர்போல் இப்பிரபஞ்சமெங்கும் இறைவன் உயிராக நிற்கிறான்.
— இராஜாஜி

★ உண்மையில் அன்பு வளரும் நீதி நிலவும் ★

## சிறுவர் பகுதி

# தேனீயும் இலையானும்

மேலே சுறுசுறுப்பாகப் பறந்துகொண்டிருந்த தேனீயைக் கீழே மந்தகதியில் அழுக்கைத் தின்று கொண்டிருந்த இலையான் கண்டது.

ஏ! நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? என்ன செய்கிறாய்? எங்கே போகிறாய்? என்று ஒரே முறையில் நான்கு கேள்விகளைக் கேட்டது இலையான்.

நான் தேனீ. அதி அற்புதமான தேனைத் திரட்டிக் கொண்டு கூட்டுக்குப் போகிறேன் என்றது தேனீ.

என்ன அவசரப்படுகிறாய் கொஞ்சம் ஆறுதலாக என் அருகே வந்து ஆவகாசமாகப் பேசலாகாதா? நீயும் நானும் ஒரே இனத்துப் பூச்சிகள்தானே! என்றது இலையான்.

ஆவகாசமா அது எங்கள் வாழ்வில் தெரியாத வேலை. நான் ஒரு துளி தேன் சேர்ப்பதற்கு 120 மலர்களிடம் போகவேண்டியிருக்கிறது. எம்மினத்தவர் ஒரு இருத்தல் தேன் சேகரிப்பதற்கு 40,000 மைல் தூரம் பறந்து திரிய வேண்டியிருக்கிறது.

நீயும் உன்னினத்தவரும் சேர்க்கும் தேன் பிறருக்குத் தானே பயன்படுகிறது. ஆகவே நீ கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டால் என்ன என்று கேட்டது இலையான்.

உண்மைதான். நாங்கள் சேகரிக்கும் தேன் எமக்கும் பிறர்க்கும் பயன்படுகிறது. பிறர்க்குப் பயன்படும்போது தடிமன், இருமல், சமியாக்குணம், மலச்சிக்கல், காசம், இருதயநோய், இரத்த அழுத்தம் முதலிய நோய்களைப் போக்குகிறது. தேகம் களைப்புற்றபோது மேன்மக்கள் சிறிதளவு தேனைத் தண்ணீரிற் கலந்து பருகுகிறார்கள். சர்க்கரை வருவதன்முன் உலகமெங்கும் தேனே கண்கண்ட இனிப்பாய் இருந்தது. இன்றும் சிறந்த உணவுப்பண்டங்கள் செய்வதற்கும், மருந்தாகவும் தேனைப் பயன்படுத்துகிறார்கள். இவற்றைவிட இறைவனுக்கும் அபிஷேகத்துக்கு உபயோகிக்கிறார்கள்.

இவ்வளவுந்தான் உன் பெருமையோ? இன்னும் இருந்தால் கொஞ்சம் சொல்லு பார்ப்போம் என்றது இலையான்.

நீ ஏதோ பெரிய இடத்தைப்பற்றி அதிகமாக அறிவதற்கு ஆசைப்படுகிறாய் போலிருக்கிறது. உனக்கு இவை யாவும் விளங்குமா? என்று தேனீ கேட்டது.

விளங்காவிட்டாலும் விளக்கமாகக் கூறினால் ஓரளவு விளங்கிக்கொள்வேன் சொல்வாயாக என்றது இலையான்.

நாங்கள் தேன் சேகரிக்கும் போது பூக்களில் உள்ள மகரந்தம் அசைகிறது. அதனால் பூக்கள் கருக்கொண்டு பிஞ்சாகிக் காயாகிப் பழமாகி மக்களுக்குப் பயனளிக்கின்றன. நாங்கள் இல்லாவிட்டால் பழமரங்கள் கனியுதவமாட்டா. எனவே எங்கள் முயற்சிகள் யாவும் சுறுசுறுப்பானவை உயர்ந்தவை. உன்போன்ற சோம்பேறிகளுக்கு எங்களிடத்தில் வேலை இல்லை. நான் வருகிறேன் என்றது தேனீ.

தோழனே! கொஞ்சம் பொறு. அவசரப்படாதே. நீ இருக்குமிடத்தில் மலமிருக்கிறதா? என்று கேட்டது இலையான்.

அதைக்கேட்ட தேனீ மலமா அது என்ன பண்டம். எங்களுக்கு மலரையும் மணத்தையும் தெரியும். மலம் என்றால் என்ன என்று தெரியாது.

இதைக்கேட்ட ஈ, ஜே! உன்னிடத்திலே பீ இல்லையே. போ போ என்றது. ★

# சாய்க்காடுமேவினார்

திருச்சாய்க்காடு என்னும் திருத்தலத்தை வணங்கித் திருப்பதிகம் பாடியருளிய திருநாவுக்கரசு நாயனார் தலத்தின் சிறப்புக்களையும் சுவாமியின் பெருமைகளையும் நாவாரத் துதித்தவருமை போற்றத்தக்கது. இறைவன் மார்க்கண்டேயருக்காக காலனை உதைத்தருளிய வீரமும், தேவர்கள் பொருட்டு ஆலகால விடத்தை அமுது செய்தருளிய அற்புதமும், வெண்நாவலின்கீழ்ச் சிவபூசை செய்த சிலந்தியை முடியுடை மன்னனாகப் பிறக்கவருள் செய்தபேறும், பஞ்சபாண்டவருள் ஒருவனாகிய பார்த்தனுக்குப் பாசுபதம் அருளிய பரிவும், பாலாபிடேகம் பண்ணிய பார்ப்பனச் சிறுவனாகிய சண்டிக்குப் பெரிய பதமும் கொன்றை மாலையும் கொடுத்தருளிய பான்மையும், பகீரதன் வரத்துக் கிரங்கிக் கங்கையைத் திருச்சடையில் தரித்த கொள்கையும், கண்ணப்ப நாயனாரின் பூசை கண்டு வந்து அவருக்குச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வளித்த பேறும், சிவபூசைசெய்த கண்ணபிரான் ஒரு தாமரை மலர் குறைவதைக் கண்டு தம் கண்ணினையே பெயர்த்து அர்ச்சிப்பக் கண்டுவந்து அவருக்குச் சக்கரவாயுதம் கொடுத்தருளிய சதுரப்பாடும், இலங்கை வேந்தன் இராவணனின் சாம கானம் கேட்டு மகிழ்ந்து மந்திர வாளும் பிறவும் அருளிச் செய்தமையும் நினைவு செய்கின்றார். ★

# லண்டன் மாநகரில் சைவ மணம்

சீமை என்னும் சிறப்புப் பெற்ற லண்டன் மாநகரம் உலகப் புகழ் பெற்றது. ஒருகாலத்தில் உலகின் ஐந்து பெருங் கண்டங்களிலும் அரசு செலுத்திய கோநகரமாயிருந்தது. தஞ்சம் என வந்தவர் எவர்க்கும் அஞ்சல் என இடமளிக்கும் பெருந்தன்மை வாய்ந்தது. பலதேய மக்களும் ஒருங்கு வாழும் உலகப் பெருநகரமாயுள்ளது: யாதும் ஊரே யாவும் கேளிர் என்னும் கோட்பாட்டின் விளக்கமாகிப் பொதுநலவமைப்பு நாடுகளையிணைக்கும் பட்டு நாடாவாக விளங்கும் மகாராணியாரின் உறையுள் உள்ளது. உலக வர்த்தகப் பெருநகரமாயுள்ளது.

சிந்தனையாளரும் செல்வரும் நிறைந்த பூம்புகார் போலப் பொலிந்து விளங்கும் லண்டன் மாநகரிலே எங்கள் நாட்டவர் பலர் பெயரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கின்றார்கள். அவர்களிற் பலர் செந்தமிழன்பும், சிவநேயமும் மறவாச் சிந்தையுடையவராய்ச் சைவ

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

★ சமயவெறி சன்மார்க்கமாகமாட்டாது ★

## உத்தமர் ஒருவர்

உலகில் உத்தமர்களும் இருக்கிறார்கள். தருமர் கலியுக ஆரம்பத்திலேயே எல்லோரையும் உத்தமராகக் கண்டவர், கணித்தவர். அதே காலத்தில் துரியோதனன் உலகத்தவரை அயோக்கியராகக்கண்டு மதித்தவன்.

உத்தமர் வாழ்வு உலக உபகாரத்துக்காக அமையும். அவர் உலக நன்மைக்காகவே உழைப்பர். அவர் எல்லோரிடத்தும் அன்பு கொண்டவர். அவர் ஆசை, கோபம் முதலியவற்றால் தாக்கப்படாதவர், நாளில் ஒரு சிறு பொழுதையும் வீணாக்காதவர். அவர் அன்பு ததும்ப இன்சொல் கூறுபவர். எவர்க்கும் என்றும் எவ்விடத்தும் நல்லனவற்றையே கூறி, நல்லனவற்றையே செய்பவர். அவர் புன்முறுவலும் ஒளிவீசும் கண்களும் உள்ளவர். சாந்தியே உருவமாக உள்ளவர். அவர் தம்மை வெறுப்பவரையும் விரும்புபவர். பொருட் பற்றற்றவர். தமக்குக் கிடைத்தவற்றைப் பிறருக்கு வழங்குவதில் இன்பங்காண்பவர்.

அவர் மலைபோல் அசையாதவர். கடல்போல் கலங்காதவர். இத்தனையும் கொண்ட ஒருபெரியார் காஞ்சிப் பெரியார். ★

## தானம்

தானமும் தவமும் தாம் செயலரிது என்பது ஔவையார் திருவாக்கு. அறஞ் செய விரும்பு என்று கூறியவரும் அவரே. அறமாகிய தர்மத்தை ஒருவன் எவ்வித பிரதிபலனுங்கருதாது இருதய சுத்தத்தோடு ஒருவரைத் தேடிச்சென்று கொடுத்தல் தானம் எனப்படும். தானம் மேலான தருமமாகும். மேலான தருமங்கள் பலவுள. அனாதைப் பிணத்தைத் தகனஞ் செய்தல், தேவாலய பூசைகள் செய்தல், ஏழைகளுக்கு உணவு உடை கொடுத்தல், ஏழைப்பெண்ணை வாழவைத்தல் முதலியன நல்லறங்கள் எனப்படும்.

### தானங்களின் வகை

பசுமாட்டைக் கொடுத்தல் கோதானம். காணி, பூமி பூதானம், எள்ளு எண்ணெய் திலதானம், காசுபணம் ஹிரண்யதானம், ஆடைவகைகள் வஸ்திரதானம், இன்னும் உப்பு சர்க்கரை, தானியங்கள் என்பனவும் தானத்துக்குரிய பண்டங்களாகும். தானம் செய்வதால் பலன் உண்டு. அமாவாசை, துவாதசி. கிரகணகாலம், உத்தராயனம், தக்ஷிணாயனம் முதலிய காலங்களில் தானஞ் செய்தல் விதிக்கப்பட்டுள்ளது. ★

## நானாட்டான் முத்துமாரியம்மன்

மன்னார் மாவட்டத்திலே நானாட்டான் என்னும் பகுதியிலே கோயில் கொண்டுள்ள திரிபுரநாயகியாகிய முத்து மாரியம்மன் அடியவருய்ய அருள்பாலிக்கும் அற்புதத் தெய்வம். நல்ல நெறி வளரும் நானாட்டான் ஊரிலுறை வல்லபையே சோதி மத்துமாரியம்மா என்று அடியார்கள் போற்றி நிற்கும் ஆலயத்தின் கும்பாபிஷேகதின விழாவின் இறுதிநாள் 6-7-1978 வியாழன் 1008 சங்காபிஷேகமும் அன்னதானமும் இசை நிகழ்ச்சிகளும் திருவிழாவும் நடைபெறும். ★

## சாரணீய தருமம்

சாரணர் பிறர்க்குப் பயன்படும்வகையில் எந்தவேலையையும் செய்யப் பழகுதல் வேண்டும். பெரியவர்கள் ஏவுகின்ற வேலைகளைச் செய்வதில் தயங்கலாகாது. நல்லவர்களுக்கு நன்மைசெய்வதில் தட்டிக்கழிக்கலாகாது.

ஒல்லாந்தர் காலத்தில் முதலியார் உத்தியோகம் வகித்த ஐயர் ஒருவர் இருந்தார். அவர் வேதம் அறிந்தவர். வைதிகப் பழக்கவழக்கங்களில் வழுவாதவர். விருந்தோம்பல் ஏழைகளுக்கு இரங்குதல் முதலிய குணங்கள் நிறைந்தவர். அவருடைய மனைவியார் தம்வீட்டு வேலைக்காரர் முதலியோருக்கு உணவளித்த பின்னரே தாம் உண்ணும் பழக்கமுள்ளவர், நல்லவர், இல்லற தர்மத்தை நன்கறிந்தவர்.

ஐயரவர்கள் கச்சேரியில் பெரிய உத்தியோகத்தரானமையால் அவருக்கு அரசினர் பொறுப்பில் தண்டிகை என்னும் பல்லக்கு இருந்தது. பல்லக்குச் சுமப்பதற்கு வேலையாட்களும் இருந்தனர்.

ஒருநாள் ஐயர் வீட்டுக் கன்றுக்குட்டியைக் காணவில்லை. அது அயல் வளவுகளில் துள்ளி விளையாடிக் கொண்டே எங்கேயோ பற்றைக் காட்டினுள் வழிதெரியாமல் திரிந்தது. கன்றுக் குட்டியைக் காணாத ஐயரம்மா, பல்லக்குச்சுமப்பவர் ஒருவரிடம், ''முத்து! கன்றுக்குட்டியைக் காணவில்லை. தயவுசெய்து அயல்வளவுகளில் பார்த்துப் பிடித்துவா'' என்று அன்போடு சொன்னார்.

அதைக்கேட்ட முத்து எத்தனையோ காலமாகப் பாலென்றும் மோரென்றும் பருகியதை மறந்து, ''அப்படியுமாயிற்றோ நாங்கள் பல்லக்குச் சுமக்க வந்தவர்களேயன்றிக் கன்றுக்குட்டியைத் தேட இங்கே வரவில்லை'' என்று தொழிலின் மகத்துவத்துக்கு வியாக்கியானஞ் செய்தார்.

''முத்து!'' என்று அழைத்தவாறே முதலியார் அங்கே வந்தார். ''சாமி!'' என்று கூறியவாறே முத்து வரவேற்பளித்தார். ''சரி சரி பல்லக்கை எடுங்கள்'' என்று முதலியார் கூறியதும் பல்லக்குத் தயாரானது. பல்லக்கில் ஏறிய ஐயர் பற்றைக் காடெல்லாம் கன்றுக்குட்டியைத் தேடுமாறு பல்லக்குச் சுமந்தவரைப் பணித்தார். ★

நம்முடைய நாட்டிலுள்ள மக்கள் நல்வழியில் நின்றாலேதான் நம்முடைய முயற்சிகள் பயனடைந்து நாடு செழிக்கும். — இராஜாஜி

★ யோகம் என்பது சித்த அலைகளை அழிப்பது ★

## கிழக்கிலங்கையில் ஞானவொளி

புறவிருளை நீக்கும் ஞாயிறு தினமும் கிழக்கில் உதயமாகிறது. அது மாலையில் மேற்கில் மறைந்ததும் நம்மை இருள் சூழ்ந்து கொள்ளுகிறது. ஆனால் இருளுக்கு இடங்கொடாமல் கிழக்கில் என்றும் சனாதனமாய் ஒளிவீசிக் கொண்டிருப்பவர் மாதுமையாள் சமேத கோணேஸ்வரப் பெருமான். அவர் திருவடிகளே தஞ்சம் எனச் சரண் புகுந்து அவர் திருவருளுக்கிலக்காகி வாழ்கின்ற தொண்டர் கூட்டமும் பக்தர் கூட்டமும் பல்லாயிரவராவர்.

மனத்தால் நினைத்தும், வாயால் வாழ்த்தியும் காயத்தால் வழிபட்டும் வாழ்பவர்களுக்கு ஒரு பொல்லாப்பும் இல்லை. திருக்கோணமலை சிவபூமி. அது ஞானபூமி. அங்கே ஞானிகளுக்குக் குறைவே இல்லை. அவர்கள் எங்கிருந்து வந்தார்கள், என்னவாய் இருந்தார்கள் என்பதெல்லாம் ஆராய்வுக்குட்பட்டவையல்ல. அவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள் என்பதே எமது ஆய்வு.

அவர்கள் சித்தத்தைச் சிவன்பால் வைத்த சிலர். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று கருதி, உய்யும் வகை நாடி வந்தவர்களுக்கு உண்மையை விளக்கி உறுதிபயக்கும் தர்மவழியைக் காண்பிக்கும் தருமசிலர். உய்யுநெறி நாடிவந்தவர்களுள் புலம்பெயர் மக்களான ஐரோப்பியரும் இருக்கிறார்கள்.

ஐரோப்பியர் சிலர் தம்புலன்களை வென்று அருமையாகத் தியானஞ் செய்கிறார்கள். இளமையிலேயே துறவு மனப்பான்மைகொண்ட யேமனியர் ஒருவர் ஓர் எஞ்ஜினியர். சிவயோக சமாசத்தில் கூட்டுதல், நீர்தெளித்தல், பாய்விரித்தல் முதலிய சரியைத் தொண்டுகளில் கன்றிய மனமும் கரணங்களும் உடையவராய், கையைத் தலையணையாய் வைத்து இரவில் தூங்குகிறார்.

இவ்வளவு ஞானமும் இவருக்கு எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? யாரால் வந்தது? இவையெல்லாம் அங்குச் சென்று அநுபவத்தில் கண்டறிய வேண்டிய நுணுக்குகள். பென்னம் பெரிய உத்தியோகத்தர், பெரிய செல்வர்கள், பெரிய வீட்டுப் பெண்கள், இல்லத்தரசிகள், பால் மணம் மாறாச் சிறுவர் சிறுமியர் இவர்கள் என்ன செய்கிறார்கள்? பக்திப்பரவசத்தில் தம்மை மறந்திருந்து சிவத்தியானஞ் செய்கிறார்கள், பாடுகிறார்கள், பரவுகிறார்கள். வாரத்துக்கொருமுறை அகண்டநாம பஜனை நடைபெறுகிறது. இல்லத்தரசிகள் வீட்டுக்கொருமுறையாகப் பிரசாதம் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார்கள். பால்மணம் மாறாப் பாலகர்களும், பாலகிகளும் பாடுகிறார்கள். ஒரு சில கன்னிப் பெண்கள், சிற்றின்பம் என்றால் என்ன என்பதே அறியாதவர்கள் ''டபிள் புறமோசன்'' எடுத்துப் பேரின்பக் கூட்டத்துள் நுழைந்துள்ளார்கள். ஞானப்பாடல்களை அற்புதமாக ஆடாமல் அசையாமல் இருந்து மணிக்கணக்காகப் பாடுகிறார்கள். அயலில் உள்ள மான்கள் இரண்டு அசைபோடுவதையும் இடையில் மறந்து பாடல்களைக் கவனிக்கின்றன. பேசும்நாவிருந்தால் அவை பாடல்களை ஒப்புவிக்கும் எனக் கருதவேண்டியிருக்கிறது.

ஆடல் பாடலுக்கு இசை வேண்டும். சின்னஞ் சிறுமியர் இசைக்கலை பயில்கின்றார்கள் வீணை, மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் அங்கே ஒலிக்கின்றன. படித்த குடும்பம் ஒன்று கணவனும் மனைவியும் ஆசிரியர்கள். அழகான குடும்பம் அளவான எண்ணிக்கை அருமையான தொண்டுள்ளம் அற்புதமான சேவை.

அண்மையில் இவர்கள் சிவஜோகசமாஜத்தார் தங்கள் பத்தொன்பதாம் ஆண்டுவிழாவைப் பக்திபூர்வமாகவும், அமைதியாகவும் அருளொளி பரப்பும் வகையிலும் அருமையாகக் கொண்டாடினார்கள். நம்மவர்கள் இவர்களிடம் படிக்கவேண்டியன பலவுள.

இவை எல்லாம் எங்ஙனம் அமைந்தன? மனித சக்தியால் அமைக்க முடியாதன. திருவருள் வழிபட்ட பெரியவர்கள் சிந்தனையூற்றில் நனைந்தாலன்றி இத்தகைய சற்கருமங்கள் இவ்வண்ணம் நடைபெறமாட்டா. சிவஜோக சமாஜம் திருவருளால் நடைபெறுகிறது.

மன்னன் உறங்கினாலும் அவன் அரசபணி நடைபெற்றவண்ணம் இருக்கும். அது உலகத்தைக் காக்கும். மன்னவன் தண்ணளி இவ்வாறாயின் இறையருள் என்ன தான் செய்யமாட்டாது. இறையருள் வயப்பட்ட துறவிகள் என்னதான் செய்யமாட்டார்கள். சிவயோக சமாஜத்துச் சுவாமியார் நினைக்கத் தொண்டர்கள் செய்து முடிக்கிறார்கள்.

தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியப் பேறு பெற்றவர், செந்தமிழன்பும் சிவநேயமும் நெஞ்சிலிடம் பெற்ற ஒருவர். அரசாங்கத்தில் சின்ன வேலை பார்க்கும் பெரியவர். பெரிய உத்தியோகத்தவர்கள் பலர் இந்தச் சின்ன உத்தியோகத்தர் சொன்ன பணிகளைச் செய்யக் காத்திருக்கிறார்கள். சின்ன உத்தியோகத்தர் ஓட்டமும் நடையுமாய் ஓயாது தொண்டுசெய்கின்றார். தொண்டர்

சமாஜத்துச் சுவாமியார் வாயாற் பேசுவது குறைவு. அவர் கண்கள் கதை சொல்லும். செய்யென் னேவல்களைக் குறிப்பிலும் அவர் உதடுகள் மெதுவாக அசைவதையே தொண்டர்கள் உற்றுநோக்கியவண்ணம் பணி செய்கிறார்கள்....

— தொடரும்


மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப்பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


★ மனபரிபாகமுற்றால் பேச்சுச் சுருங்கும் ★

# திராட்சை என்னும் அற்புதக் கனி

(ஆங்கில மூலம் - சித்தம் சபாரத்தினம் அவர்கள்)

### பெயர்

திராட்சை என்னும் அற்புதக்கனி செல்வங்கொழிக்கும் சிறந்தகனியுமாகும். இதன் தாவரவியற் பெயர் விற்றிஸ் வினிபெரா என்பதாகும். இதை அரவாரம் என்றும், கொடிமுந்திரி என்றும், முந்திரிகை என்றும், மதுரசம் என்றும் பலோத்தமை என்றும் செல்லமாக வழங்குவர். இதைத் தெலுங்கு மலையாளம், ஆந்திரா, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் திராட்சை என்பர். சிங்களத்தில் மிதி என வழங்குவர்.

### மகிமை

மருத்துவர் ஜி. எஸ். வர்மா என்பார் திராட்சைக் கனியின் பயன்களை விபரமாக விளக்கியுள்ளார். பலவித நோய்களை நீக்கும் இக்கனி போஷனைக்குரியதாகவும், மலச்சிக்கலை நீக்குவதாகவும், ஊட்டந்தருவதாகவும், சிறுநீர் அடைப்பை நீக்குவதாகவும் உள்ளதென்பர். குழந்தைகள் முதல் வயோதிபர் ஈறாகவுள்ளவர்களுக்குத் தீராநோய் தீர்த்துவிடும் திவ்வியம் பழுத்தகனி திராட்சையமுதமாகும்.

### உட்கொள்ளும் முறை

குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஒரு கரண்டி வீதம் திராட்சைச் சாறு ஒரு நாளில் மூன்றுவேளைகள் கொடுக்க, பெரியவர்களுக்கு நான்கு அவுன்ஸ் சாறு வீதம் மூன்று வேளை அல்லது மறுதலிக்கும் நோய் உள்ளவராயின் நோய் நீங்கும்வரை நிமிடமொன்றுக்கு ஒரு கனிவீதம் மூன்று மணி நேரம் கொடுக்கவும்.

### திராட்சைக்கனியுண்பதன் பயன்

குழந்தைகள் மலர்ச்சியுறுவதோடு அவசியமின்றி அழுதலின்றி நல்ல பல் முளைத்துச் சுகம் பெறுவர். கர்ப்பவதிகளுக்கு நல்ல ஆதரவு தருவது. கல்லீரல் உறுதிபெறச் செய்வது. மூளை வலுப்பெற ஆதரவானது. மலக்கட்டு இருமல், தடிமன், தலையிடி, வலிப்பு, மயக்கம், இளைப்பு, சமியாக்குணம், நீர்விடாய் புளியேப்பம், காசம், கசம், இருதயக்கோளாறு, இருதயப்பெலவீனம், கடுமையான தலைவலி, சலப்பையில் கல்லடைப்பு முதலிய உபத்திரவங்களை நோய்களை நீக்குவதில் நிகரற்றது.

குழந்தைகள் மலர்ச்சியும் அழகும் வலுவும் உறுதியும் உள்ளவராய் வளர்வர். ஆங்கிலேயர் தங்கள் குழந்தைகளின் உடம்பு உறுதிபெறத் தேனும் திராட்சைச்சாறும் கலந்து கொடுப்பார்கள். ஒரு கரண்டி திராட்சைச் சாறினை உட்கொள்வதால் குழந்தைகளின் மலச்சிக்கல் உடனடியாக இழகி நீங்கிவிடுகிறது. காலையிலும் மாலையிலும் குழந்தைகளுக்குத் திராட்சைச்சாறு மிகுந்த நன்மை தருவது. வலிகள், இழுப்புகள், மயக்கங்கள், இருமல், இளைப்பு முதலிய துன்பங்களைப் போக்குவது. தேனுடன் கலந்து கொடுப்பதால் நுரையீரல் உறுதிபெற்று நன்றாகச் சுவாசிப்பதற்கு ஏதுவாகும்.

கர்ப்பந்தரித்தவர்கள் திராட்சையின் நன்கு கனிந்த நறுங் கனிகளை உண்டுவருதல் மிகவும் நன்மை தரும்.

தளர்ச்சி, நரம்புச் சோர்வு, ஊக்கக்கேடு, கல்லீரல் மந்தம் முதலியன உள்ளவர்கள் திராட்சைக் கனியுண்டு வருவார்களாயின், அவை இலகுவாகச் சமிபாடாகி உடம்புக்குத் தெம்பும் உறுதியும் உற்சாகமும் அளிப்பதோடு மன மகிழ்ச்சியையும் தரும். உடம்பில் புதிய இரத்தம் உற்பத்தியாகி, உடல் நிறையும் வேண்டியளவுக்கு அதிகரிக்கும். குடல்களில் உண்டாகும் மலச்சிக்கலை உடனடியாக நீக்கும்.

மேற்குப் பிரான்ஸ் பிரதேசம், தெற்கு ஜேமன் பிரதேசம் சுவிற்சலாந்து முதலிய இடங்களில் கல்லீரல், மந்தம் முதலிய நோய்களுக்குத் திராட்சைக் கனிகளையே மருந்தாகவும் உணவாகவும் கொடுத்துப் பூரண சுகமடையச் செய்கிறார்கள். இப்பிரதேச மக்கள் சஞ்சலமுறும் வேளைகளில் நாட்டுப்புறங்களுக்கும் காட்டுப்பகுதிகளுக்குஞ் சென்று நல்ல காற்றைச் சுவாசித்து, நாளொன்றுக்கு மூன்று முதல் ஆறு இறாத்தல் திராட்சைக்கனிகளை உண்கிறார்கள். இதனால் இவர்கள் களைப்பு, சஞ்சலம், சோர்வு முதலிய துன்பங்களினின்றும் குணமாகிப் புதுப் பொலிவும் புன்னகையும் பூத்து மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு மீளுகின்றார்கள்.

### சமியாக்குணம்

உணவு சமியாமல் இருப்பதைச் சுகப்படுத்துவதற்குத் திராட்சையைவிட வேறெந்தப்பழமும் பயன்தரமாட்டாது. சமியாக்குணம் போக்கத் தயாரிக்கப்படும் திராக்சாசவ, திராட்சாரிட்ஸ்ட, அங்குரசவ முதலிய மருந்துகள் யாவும் திராட்சைப் பழத்தை மூலமாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

நிமிடந்தோறும் ஒவ்வொரு திராட்சைக்கனியை மூன்று மணி நேரம் உண்டு, வெறும் பாண் துண்டுகளை ஆகாரவேளையில் உட்கொண்டிருப்பாருக்கு ஊக்கக்கேடு, நரம்புச்சோர்வு உடனடியாகக் குணமாகும். கடின உழைப்பாளிகளுக்கும் திராட்சை கைகொடுக்கும் சஞ்சீவியாகும்.

### தடிமனும் இருமலும்


திராட்சைப் பழரசம் நுரையீரலைச் சுத்தஞ்செய்து உறுதியளித்து உள்ளேயுள்ள கபத்தை வெளியேற்றுவதில்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

## 1978 யூலை மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 1 | சனி | — ஏகாதசி, கார்த்திகை விரதங்கள் |
| 2 | ஞாயிறு | — பிரதோஷ விரதம் |
| 5 | புதன் | — அமாவாசைவிரதம், கதிர்காமம் கொடி |
| 9 | ஞாயிறு | — மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை |
| 10 | திங்கள் | — மாவிட்டபுரம் கொடி |
| 11 | செவ்வாய் | — ஆனி உத்தர தரிசனம் |
| 16 | ஞாயிறு | — ஏகாதசி விரதம்<br>தட்சிணாயன காலம் ஆரம்பம் |
| 17 | திங்கள் | — பிரதோஷ விரதம் |
| 19 | புதன் | — பூரணை விரதம் |
| 21 | வெள்ளி | — கதிர்காமம் தீர்த்தம் |
| 28 | வெள்ளி | — கார்த்திகை விரதம்,<br>வண்ணை தையல்நாயகி கொடி,<br>கலட்டி அம்மன் கொடி. |

★ சரீர உணர்வை வென்றால் ஆணவம் குறையும் ★



## பஞ்ச தந்திரம்

பாலை தொட்டாலும், பாம்பு மோந்தாலும், அதிகாரி நகைத்தாலும், துர்ச்சனன் மரியாதை பண்ணினாலும் கேடுவரும்.

நஞ்சில்லாப் பாம்பும் படமெடுத்தால், பயங்கரமாய் உள்ள படத்தின் வடிவத்தைப் பார்த்து மனிதர் பயப்படுகிறார்கள்.

மூடத்தனம், இளமையும், சோம்பல் இன்மையும், பொய் இன்மையும், ஊகித்தறிதலும் தூதலட்சணம்.

பெரியோர்களை அடுத்திருந்தால் மலைபோல் வந்தவினை சூரியன்முன் பனிபோல் நீங்கும்.

துஷ்டருடைய கூட்டுறவு கணப்போதிருந்தாலும் கெடுதி வரும்.

வாவி, கிணறு, குளம், கோயில், சத்திரம் இவற்றின் சொத்துரிமை அவற்றைவிட்டு நீங்கினபின்பு நீங்கினவன் இடத்திலிரா.

தர்மத்தைவிட்டு எவன் நாட்களைக் கழிக்கிறானோ அவன் மரப்பாவையை ஒத்தவனாவன். அவன் மூச்சு விட்டுக்கொண்டிருந்தாலும் பிணத்துக்குச் சமமானவன்.

தயிரின் சாரம் நெய்யாவது போலும், எள்ளின் சாரம் எண்ணெய் ஆவது போலும், அப்படியே பிழைத்திருக்கின்றதின் சாரம் தருமமாம்.

தருமந் தவறிச் சோற்றை யுண்டுகொண்டிருப்பவர்கள் நிலத்துக்குச் சுமையாய் இருக்கிறார்கள். ★

## அடுக்குமொழிகள் சில

| | |
|---|---|
| கனவு நனவு | காய்த்துப் பழுத்து |
| கஷ்ட நஷ்டம் | காய்தல் உவத்தல் |
| காக்கான் போக்கான் | காய்ந்து கருகி |
| காச்சுப் பூச்சு | காய்ந்து தீய்ந்து |
| காடு மேடு | காரண காரியம் |
| காதலும் கலியாணமும் | காலம் நேரம் |
| காதிலே கழுத்திலே | காலை மாலை |
| காமம் வெகுளி | காற்றும் மழையும் |

கவிதைப் பகுதி

# முந்து மதம்

[ஈச்சந்தீவிலிருந்து தாமரைத்தீவான் என்பார் யாத்தனுப்பிய கவிதைகள் இவை. காஞ்சிப் பெரியவர் கட்டளையிட்டருளிய வண்ணம் மில்க்வைற் தொழிலதிபர் நாடெங்கும் இந்துசமய மன்றங்களை அமைப்பதிலும் அமைப்பவருக்கு உதவுவதிலும் ஊக்கம் உள்ளவர்.]

முந்திப் பிறந்திட்ட மூத்த மதமான
இந்து மதத்திற்கே எல்லோரும் எப்படியோ
சொந்த மெனவந்தே தோன்றியதால் உண்மையிலே
இந்தப் பிறவிதனை எடுத்தபயன் பெற்றோமே. 1.

இந்து மதமென்னும் இணையற்ற தத்துவமே
இந்த வுலகத்தில் எப்போதும் எங்கெங்கும்
எந்த இனத்தார்க்கும் ஏற்புடைய தாகுமெனில்
அந்தப் பெருமை அனைத்தும் நமக்கன்றோ? 2.

"இந்து மதநாற்ற இழிதகைமைச் சாத்திரத்தை
வெந்தழலிற் போட்டு வேகவைப்பதென்றாள்" என்
றந்தம் வரையும் அறியாது சொன்னோரும்
இந்தநாள் "அர்த்தமுள்ள இந்து மதம்" என்றாரே! 3

இந்துமதம் என்றால் இளையமதம் ஆகாது
முந்துமதம் அதனால் மூத்தமதம் எங்களது
சொந்தமதம் மட்டுமோ தூயமதம் இம்மதத்தின்
அந்தம் அறிவோர் யார்? ஆதி தெளிவோர் யார்? 4.

இந்து மதம் வாழ்க! இனிய தமிழ் வாழ்ந்திடுக!
இந்து இளைஞர்களின் எழிலவைகள் வாழ்ந்திடுக!
இந்துப்பணி வெல்க! எல்லோரும் ஈழத்தில்
பந்தமொடும் பாசமொடும் பல்லூழி வாழியவே! 5.

## இந்துசமயவிருத்திச் சங்கப் பரிசளிப்பு விழா

நீர்வேலியும் அதன் அயலூர்களும் சைவமும் தமிழும் வளர்த்த செம்மை வாய்ந்தவை. சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளை, நீர்வேலி சங்கரபண்டிதர், வடகோவைச் சபாபதிநாவலர் தமிழ்நாட்டிலும் புகழ் பெற்றவர்கள். இத்தகைய புகழ்பூத்த வலிகாமம் கிழக்குப் பகுதி இன்னும் நல்ல பணிபுரிந்துவருகிறது.

நீர்வேலி கந்தசுவாமி கோயிலை மையமாகக்கொண்டு மேற்சொன்ன இந்துசமய விருத்திச் சங்கம் சனி ஞாயிறு வாரங்களில் பண்ணிசை வகுப்பு நடத்தி வருகிறார்கள். இவ்வகுப்பினை ஓதுவார் சண்முகசுந்தரம் அவர்கள் நடத்தி வருகிறார்.

இங்குக் கற்றுவரும் மாணவர் தொகை வாரம் தோறும் பெருகிவருகிறது. சென்ற 4-6-78 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மில்க்வைற் தொழிலதிபர் சிறப்புரையாற்றியதோடு தாமே பிள்ளைகளின் பரிசு நூல்களையும் உபகரித்தார். விழாவுக்குச் சங்கத்தலைவர் பிரம்மஸ்ரீ இராசேந்திரக் குருக்கள் தலைமைதாங்கினார். ★

★ உள்ளம் உலகப்பற்றிலிருந்து விலகவேண்டும் ★

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

**லண்டன்....**

சமயத்தைப் பேணி வாழ்கின்றார்கள். லண்டன் முரசு என்னும் வெளியீடு தமிழோசை பரப்புகிறது.

ஆங்குறையும் சிறுவர் பெரியவர் பலர் சைவப் பெரியவர்களின் குருபூசைத் தினங்களைக் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். சைவ அநுட்டானங்களை ஆதரித்துக் காக்கின்றார்கள்.

### சைவமுன்னேற்றச் சங்கம்

அங்குள்ள சைவ முன்னேற்றச்சங்கத்தைச் சேர்ந்த மெய்யடியார்களை என்னென்பது. சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த முறையில் ''மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டுக் கப்பால் முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோர்'' என்போமா? அவர்கள் மெதடிஸ்ட் சேர்ச் மண்டபத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் குருபூசையைச் சைவச் சூழலில் நடத்திய முறையைத் தொழிலதிபர் கனகராசா அவர்களுக்குக் கிடைத்த நன்றிக் கடிதமொன்று நயம்பட நவில்கின்றது.

— தொடரும்

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

**திராட்சை....**

நிகரற்றது. சாதாரண தடிமன் இருமல் வரும்போது இரண்டு மூன்று நாட்களில் அவற்றைப் போக்குவதில் திராட்சை பயன்தருவது. தேனுடன் கலந்து திராட்சை ரசத்தைப் பருகுதல் இருமலைப் போக்குவதற்கு உடனடியான உறுதியான மருந்தாகும். திராட்சைரசம் உட்கொண்டவர் மூன்றுமணி நேரத்துக்குத் தண்ணீர் அருந்தலாகாது. நீரருந்தினால் இருமல் அதிகரிப்பதற்கு ஏதுவாகலாம்.

### காசமும் கசமும்

கசநோயாளர் திராட்சைத் தோட்டத்திலே வாழ்வாராயின் உலாவி வருவாராயின் அந்நோயின் உபத்திரவம் வெகுவாகக் குறையும். விரைவில் நோய்நீங்க ஏதுவாகும். நோயாளி திராட்சைப் பழத்தையுண்டும் அதன் ரசத்தைப் பருகியும் வருதல் அரிய மருந்தாகும்.

### இரத்த இருமல்

இரத்தங்கக்கும் இருமல்நோய் வந்தவர்களுக்குத் திராட்சைப்பழம் நோய் நீக்குவதோடு மனமகிழ்ச்சியையுந் தருகிறது.

### வயிற்றுமந்தம் - உணவுசெரியாமை

பசியின்மை, அதிக நீர்விடாய், வயிற்றுப்பொருமல், உண்டபின் வயிற்றில்நோ, நாற்றமுள்ள சுவாசம், தலையிடி, நெஞ்செரிவு முதலியன உள்ளபோது திராட்சைக்கனியை உட்கொண்டு வயிற்றுக்கும் குடல்களுக்கும் ஆறுதல் கொடுக்கலாம். திராட்சை மிகவும் மென்மையான உணவாதலால் அது சமியாக்குணம், வயிற்றெரிவு முதலியவற்றை நீக்கி நல்ல சுகத்தைத் தரும்.

### பசியின்மை - உணவில் வெறுப்பு

புளிப்புத்தன்மையுள்ள திராட்சைப்பழச் சாற்றுடன் சிறிதளவு கற்கண்டுப் பொடி கலந்து உட்கொண்டால் உணவில் வெறுப்பு நீங்கிப் பசியுண்டாகி நன்மையுண்டாகும். குணமுண்டாகும்வரை இதனைத் தொடர்ந்து உட்கொள்ளுதல் வேண்டும். மாவுடன் புளித் திராட்சைச் சாறும் சேர்த்துப் பிசைந்து உரொட்டி செய்து இரண்டு வாரங்களுக்கு உண்டுவருதல் நன்மைபயக்கும்.

### அதிக நீர்விடாய்

சமியாக்குணம் முதலியவற்றால் உண்டாகும் அதிக நீர்விடாய் குணமாவதற்குப் புளித்திராட்சைச் சாறு பருகுதல் அற்புதமாகக் குணந்தரும்.

### மலக்கட்டு

சமிபாட்டுறுப்புக்களைச் சுத்தஞ்செய்வதோடு வயிற்றையும் குடல்களையும் இயக்கி மலச்சிக்கல் உண்டாகாமற் செய்வதற்கு நான்கு அவுன்ஸ் திராட்சைக்கனிகள் போதுமானவை.

### இருதயக்கோளாறு

இருதயத்தைப் பலப்படுத்தும் தன்மை திராட்சைக் கனிக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. இருதய சுகயீனமுள்ளவர்கள் தங்கள் நாளாந்த உணவில் போதியளவு திராட்சைப் பழங்களை உண்டு வருவாராயின் அவர்களின் நோய் நீக்கத்துக்கு வேறெந்த மருந்தும் வேண்டியதில்லை என்பது வைத்திய நிபுணரின் கண்டுபிடிப்பாகும்.

### மிகுதியான நெஞ்சுத்துடிப்பு

கவலை பெலவீனம் முதலியவற்றால் இருதயம் மிகுதியாகத் துடிப்பதும், நெஞ்சுப்பை நோவும் உள்ளவர்கள் திராட்சைக் கனியை மாத்திரம் உண்டு வருவராயின் மிக விரைவில் குணமடைவர்.

### மூளைப்பலவீனம்

மூளை வேலை அதிகமாகச் செய்கின்ற நிபுணர்கள், அறிஞர்கள் மேதாவிகள் நாள்தோறும் ஒரு கிண்ணம் திராட்சைப் பழரசம், அல்லது மூன்று வேளை நாலு அவுன்ஸ் பழம் உட்கொண்டு வருவாராயின் எல்லாவிதமான சோர்வுகளும் பலவீனங்களும் நீங்கி மன நிம்மதியும் சுறுசுறுப்பும் மூளைப் பெலமும் உண்டாகும். நன்றாக வேலைசெய்யும் ஆற்றலும் அதிகரிக்கும்.

### ஒற்றைத்தலைவலி

கற்பனைப்புனைவு என்றும் மைகிறேன் என்றும் வழங்கும் தலைவலி உடனடியாக நீங்குவதற்கு நான்கு அவுன்ஸ் இனிப்புத் திராட்சைக்கனி உண்ணல் பயன் தருகிறது.

### காக்காய் வலிப்பு

நல்ல நறுங்கனிகளாக எடுத்துப் பிழிந்து தினந்தோறும் மூன்று வேளை ஒவ்வொரு கிண்ணம் திராட்சைச் சாறு மூன்று மாத காலத்துக்குப் பருகிவந்தால் காக்காய் வலிப்பு நீங்கிச் சுகமுண்டாகும்.

### பித்தலாட்டம்

தன்னிலை மறந்து பித்தலாட்டம் புரிவோருக்குத் திராட்சைப்பழம் நிகரில்லாத மருந்தும் உணவுமாகும். இதனை இருபத்தொரு நாள் முதல் நாற்பத்திரண்டு நாள் வரை உட்கொள்வதால் உடன் பயன் உண்டாகும். திராட்சை பித்தந் தெளிவிக்கும் கைகண்ட மருந்தாகும்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

★ உடற் பலமும் உள்ளப்பலமும் எமக்கு வேண்டும் ★

## குளங்கள் வரண்டுள்ளன

வட மாநிலமெங்கும் வரட்சியைப்போக்கி வளத்தினை நல்கும் குளங்கள் வற்றி வரண்டு புழுதி பறக்கின்றது. குளத்தருகே உள்ளவர்கள் தங்கள் குளங்களை ஆழமாக்கி நல்ல பயன்பெற விரும்பினால் எமக்கு அறிவியுங்கள். நாங்கள் மண்வெட்டி, தாச்சி, தட்டிகள் உதவிசெய்து உங்கள் குளந்தோண்ட உடனடியாக வருவோம்.

மில்க்வைற் — தபாற்பெட்டி 77, யாழ்ப்பாணம்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

### விழா நாயகம்....

அறிஞர் வரிசையினையும் உருவாக்கிவிட்டார். அந்த வரிசையில் வந்தவர் அறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆவர். யாழ்ப்பாணக் கலாசாரத் தூதராகவும், கல்வியின் தூதராகவும் விளங்கும் பண்டிதமணி அவர்கள், ஆறுமுக நாவலர் எவ்வாறு தமக்கென ஒரு அறிஞர்குழாம் வரிசையினை உண்டாக்கினரோ, அதேபோல, இன்று இந்த நாட்டில் பண்டிதமணி அறிஞர்குழாம் ஒன்றினை உருவாக்கியுள்ளார். ''பண்டிதமணியிடம் பயின்றோம்'' என்று கூறுவதிலே இவர்கள் பெரிதும் பெருமையடைவர்.

மாண்புமிகு வேந்தர் அவர்களே!

இவ்வாறு தமக்கென ஒரு பரம்பரையை உருவாக்கியவரும், வாழ்நாள் முழுவதையும் சமயத்துக்கும் இலக்கியத்துக்கும் அர்ப்பணித்தவருமாகிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு, அவர் சமுகமளிக்காத நிலையில், கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.''

இவ்விசேட பட்டமளிப்புவிழா கொழும்பில் 31-5-78 புதன்கிழமை நடைபெற்றபின் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பெருவிழாவில் பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ், திருவாளர்கள் ந. சபாரத்தினம், ச. அம்பிகைபாகன், க. சி. குலரத்தினம் பாராட்டுரை வழங்கினர்கள். பல்கலைக்கழக மாணவர் ஜெயபாலன் பாராட்டுப் பா படித்து வழங்கினர்.

மில்க்வைற் தொழிலதிபர் பண்டிதமணியவர்களின் சேவையும் மணிமொழிகளும் கொண்ட நூலை வெளியிட்டு வழங்கியதோடு பண்டிதமணிக்கு மாலையிட்டு வணங்கிச் சிறப்பித்தார். ★

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

### திராட்சை....

#### சலப்பையில் கல்லடைப்பு

சிறுநீர்க் கோளங்கள் பைகளில் கல்லடைப்பு உண்டாகி வருந்துவோர் மேற்குப் பிரான்ஸ் பிரதேசம், தென் ஜேமன் பிரதேசம், சுவிற்சலாந்து ஆகிய இடங்களில் திராட்சைக் கனியுண்டு நோய் நீங்கப் பெறுகிறர்கள். அன்றி மலச்சிக்கல், புளியேப்பம், குன்மம், கல்லீரல் நோய்களுக்கும் கைகண்ட மருந்தாக உபயோகிக்கிறர்கள்.


## மில்க்வைற் நீல சோப்




இலங்கையில்
முதன்முதல் நீலங்கலந்த சோப் தயாரித்தவர்
மில்க்வைற் ஸ்தாபனத்தார்.
நுரைவளம் மிக்க நீலசோப் இரண்டுவித நன்மை தருகிறது.

அழுக்கை நீக்குகிறது
நீலம் போடும் வேலையை நீக்குகிறது

குறிப்பு: மூலப் பொருள்கள் விலையேற்றம், காகித விலை ஏற்றம் – இருந்தும் நாங்கள் சோப் விலையைக் கூட்டவில்லை.

விலை சதம் 60 மட்டுமே!

10 மேலுறைகளை அனுப்பி
மில்க்வைற் செய்தி அல்லது வெளியீடு ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


## பனைகள் பழுக்கின்றன

பனைவளம் பெருக்கும் பணியினை மேலும் பரவலாக நாம் செய்வதற்குப் பலரும் முன்வருகிறர்கள். உங்களிடம் பனம் விதைகள் இருந்தால் எமக்கறிவியுங்கள். நாங்கள் அவற்றை வரண்டபிரதேசமெங்கும் நாட்டிப் பனையபிவிருத்திசெய்வோம். உங்களுக்குப் பனைவளம் பெருக்கிய பண்பாளர் என்னும் பட்டமும் பரிசும் தருவோம். பனையைத் தறிக்காதீர் பயனைக் குறைக்காதீர்.

மில்க்வைற் பனைப்பிரசாரப்பகுதி,
தபாற்பெட்டி 77, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்: ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-7-78.